# திருமலை நகருக்கு வெளியே மோதல்கள் நகரில் மட்டும் ஓரளவு சிவில் நிர்வாகம்

திருகோணமலை நகர்ப்பகுதியில் சுமார் மூன்று மைல் சுற்றாடலிலேயே சிவில் நிர்வாகம் ஓரளவு நடைபெறுவதாகவும், இப்பகுதி தற்போது பொலிஸாரின் கட்டுப்பாட்டில் உள்ளது எனவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. நகருக்கு வெளியே உள்ள பகுதிகளிலும் கிராமப்புறங்களிலும் பொம்மர் ஹெலித்தாக்குதல்கள் தொடர்ந்தும் நடைபெற்றுவருகின்றன. விடுதலைப்புலிகளுக்கும் படையினருக்கும் இடையில் மோதல் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. இதன் காரணமாக கிராமப்புறங்களில் உள்ள மக்கள் பகல் நேரங்களிலே தமது வீடுகளில் தங்குகின்றனர். இரவு நேரங்களில் கோயில்கள், பாடசாலைகளில் தங்குகின்றனர். இதே சமயம் திருகோணமலையில் உள்ள அரச அலுவலகங்களில் போதியளவு ஊழியர்கள் வரவின்றிக் காணப்படுகின்றது. நகருக்குள் வருபவர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுகின்றனர்.

43 ரு

பக்கங்கள் நான்கு விலை ரூபா ·3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 228 சனி 29-09-1990 (புரட்டாதி 13) ற.அவ்வல் 09

# திருமலை தமிழ் அரச ஊழியர் 500 பேர் வேலை இழந்தனர்

திருகோணமலையில் பணிபுரியும் ஐந்நூறு தமிழ் அரச ஊழியர்களுக்கு கடமைக்கு சமுகம் தரவில்லை என்ற காரணத்தால் வேலை நீக்க கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது:

திருகோணமலையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளால் அங்கிருந்து இடம் பெயர்ந்து யாழ். மாவட்டத்துக்கு வந்துள்ள இவ்வூழியருக்கே இந்த வேலை நீக்க கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளன.

இதன்படி திருகோணமலையில் உள்ள அரச திணைக்களங்கள், கச்சேரி, கூட்டுறவு திணைக்களம் என்பவற்றில் பணிபுரியும் சுமார் ஐந்நூறு ஊழியர்களுக்கு ஸ்தாபனக் கோவை அத்தியாயம் 'V' பிரிவு 7 : 1 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நியதிகளுக்கமைவாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவர்களை வேலைக்கு

—04 ஆம் பக்கம் பார்க்க

## ஒன்பது வேங்கைகளுக்கு மக்கள் திரளாக அஞ்சலி

தமிழீழ விடுதலைப் புலிகளினால் கடந்த மாதம் 5-ம் திகதி யாழ். கோட்டைமீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் முன் நின்று போராடி வீரமரணத்தைத் தழுவிக்கொண்ட வேங்கைகளின் ஒன்பது உடல்கள் நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மக்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது,

—04 ஆம் பக்கம் பார்க்க

## பீரங்கிப் படகுகளும் அகன்றன

கடற்படை பீரங்கிப்படகுகளை நேற்றுச் காலையிலிருந்து இரவு 7.25 மணிவரை கடலோரத்தில்தெரியவில்லை மண்டைதீவில் இருந்து ராணு

—04 ஆம் பக்கம் பார்க்க

## இந்து மகளிர் கல்லூரியிலே தபால்களைப் பெறக் கோரிக்கை

யாழ்ப்பாணம் இந்து மகளிர் கல்லூரியில் இயங்கும் யாழ். பிரதம தபாலகத்தில் தபால் நிர்வாக எல்லைக்குட்பட்ட இடம் பெயர்ந்தவர்களும், இடம் பெயராதவர்களும் தமக்குரிய கடிதங்களை வேலை நாட்களில் காலை 9-00 மணி தொடக்கம் 12-00 மணி லரை பெற்றுக்கொள்ளும்படி அறிவிக்கப்பட்டுள்

—04 ஆம் பக்கம் பார்க்க

## சந்தை மீது கலிபர் தாக்கு

நேற்றுப் பகல் 11-00 மணியளவில் சுன்னாகத்தில் நடமாடிய 'ஹெலி' ஒன்று சுன்னாகம் சந்தையை நோக்கிச்

—04ஆம் பக்கம் பார்க்க

## இந்த யுத்தமும் அரசாங்கமும் சிங்கள தொடர்பு சாதனங்களும்

ஜுன் 11-ல் ஆரம்பிக்கப்பட்ட இந்த யுத்த சன்னதம் அரசாங்கத்திற்கு எத்தகைய பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. சிங்களத் தொடர்பு சாதனங்கள் இந்த யுத்தத்தை எவ்வாறு சித்திரித்து வந்துள்ளன— நியாயப்படுத்துகின்றன — யுத்த வெறியாட்டத்தில் அவைஎந்நிலையில் நின்று தொழிற்பட்டன என்பனவற்றைப்பற்றி 'சில குறிப்புக்கள்' தருகிறார் எமது அரசியல் விமர்சகர் க. மா. இராசையா அவர்கள். இன்றைய முரசொலியில் அவர் கட்டுரைத் தொடர் ஆரம்பமாகிறது.

''அடுப்புத் தொடர்ந்து எரிந்துகொண்டிருந்தால் தான் தண்ணீரின் இயலாமையும், சட்டியின் ஏலாமையும் தெரிய வரும்''

''வலது கையால் பசிக்குப் பிச்சையும் இடது கையால் சுடத் துப்பாக்கியும் கேட்கும் எவருக்கும் இரண்டுமே கிடைப்பது சிரமமே''

— இக் கூற்றுக்களின் உட்பொருளை உய்த்துணர, எமது அரசியல் விமர்சகர் எழுதும் குறிப்புக்களை முழுமையாக வாசியுங்கள்!

## அத்தியாவசிய சேவைகள் நேற்று உயர் மட்டக் கூட்டம்

யாழ் மாவட்டத்தில் உள்ள வங்கிகள், மின்சாரம், சுகாதாரம், தபாற்சேவைபோன்ற அத்தியாவசிய சேவைகள் குறித்து நேற்று உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட கூட்டத்தில் ஆராயப்பட்டது.

உடுவில் மகளிர்பாடசாலையில் யாழ். அரசாங்க அதிபர்

—04 ஆம் பக்கம் பார்க்க

## வீரமரணம்

நேற்று மண்கும்பானில் ராணுவத்தினருக்கும்புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற மோதலின் போது புலிகளின் தரப்பில் சத்தியராஜ் (காரைநகர்) வீரமரணமடைந்தார்.

48 து

## விலைப்பட்டியல் அவசியம்

யாழ். மாவட்டத்திலுள்ள தனியார் மற்றும் பல· நோ. கூ. சங்கங்கள் ஐப்பசி மாதம் முதலாம் திகதி செவ்வாய் முதல் சகல பொருட்களினதும் விலைப்பட்டியல்களை பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும் என விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் அத்தியாவசிய சேவைக்குழு அறிவித்துள்ளது.

—04ஆம் பக்கம் பார்க்க

## திருமலை கொழும்பு பஸ் சேவை 13 இடங்களில் சோதனை

திருமலையில் இருந்து கொழும்பிற்குச் செல்லும் போது 13 இராணுவ முகாம்களைத்தாண்டியே செல்லவேண்டிய நிலை உள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த ஒவ்வோரு முகாமி

—04ஆம் பக்கம் பார்க்க

## மண்குப்பானில் கடும் மோதல்

நேற்று மண்கும்பான் பகுதியில் ராணுவத்தினருக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நடைபெற்றமோதலில் ராணுவத்தரப்பில் பெருமளவிலான இழப்புகள் ஏற்பட்டுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மண்டைதீவில் தங்கியிருந்த ராணுவத்தினர் அங்கிருந்து வெளியேறி வடக்கு திசையாக மண்கும்பான் பகுதியை நோக்கிச் சென்றனர்.

—04 ஆம் பக்கம் பார்க்க

இவ்வாண்டு யாழ். இந்துக்கல்லூரிக்கு நூறாவது ஆண்டு !

## இந்த மண்ணில் ஓர் சோதி எழுந்தது - யாழ் இந்து என்றொரு நாமம் பூண்டது!

# மும்முனைத் தாக்குதலினால் யாகப்பர் ஆலயம் முற்றாகச் சேதம்

கடற்படைப் பீரங்கித்தாக்குதல், மண்டைதீவு ஷெல் காரணமாகவும் 150 வருடகால பழமை உடைய யாழ். சின்னக்கடைக்கு அருகில் உள்ள புனிதர் யாகப்பர் ஆலயம் முற்றாக சேதமடைந்துள்ளது.

பிரதான வீதியில் உள்ள இதன் நுழைவாயிலில் இருந்து கோயிலின் உட்பகுதிக்கு செல்லும் முன்முகப்பு மண்டபத்தில் உள்ள புனிதர் யாகப்பர் குதிரையில் பவனிவரும் சுருபத்தில் உள்ள யாகப்பரின் தலை விழுந்த நிலையிலுள்ளது. அத்துடன் முன்புறத்திலுள்ள பாரிய கதவுகள் உடைந்துநொருக்கிக் காணப்படுகிறது.

கோயில் பூசைப்பலியில் பங்கு கொள்ளும் மக்கள் இருப்பதற்கு போடப்பட்டுள்ள வாங்குகளும் உடைந்த நிலையிலுள்ளது. இங்குள்ள ஒவ்வொரு தூணிலும் உள்ள கல்வாரி பலிப்பாடுகளின் படங்களும் உருக்குலைந்தும் நொருங்கி உடைந்தும் காணப்படுகிறது.

கோயிலின் கிழக்குப் புறச் சுவர்களும் உடைந்து காணப்படுகிறது. கோயிலைச் சுற்றியுள்ள மேற்கூரையில் பொம்மர் தாக்குதல் காரணமாக பல ஓடுகளும் உட்புற சீற்றுக்களும்உடைந்து காணப்படுகிறது. உள்ளிருந்து பார்க்கும் போது ஒரே வெளியாக காட்சியளிக்கிறது.

பூசைப்பலி ஒப்படைக்கும் பலிப்பீடமும் உடைந்துள்ளது. இவ் மேற்கூரை பொம்மர் தாக்குதலினால் உடைந்துள்ளது. பீடத்துக்கு முன்னுள்ள பூசைப் பரிசாரகர் பாவிக்கும் அறையினுள் பீரங்கிக் குண்டு ஒன்று மேற்குப் புறமாக துழைத்துச் சேதப்படுத்தியுள்ளது இதனால் இவ்அறையில் உள்ள உயிர்த்த ஆண்டவர் சுருவமும், வேளாக்கண்ணி மாதா சுருவமும்,சுக்குநூறாக உடைந்த நிலையிலுள்ளது.

கோயில் வளவில் உள்ள யாகப்பர் விற்பனை நிலையம், மருந்தகம், மெழுகுதிரி அறை என்பனவும் சேதமுற்றுள்ளது. அத்துடன குருவானவர் தங்கும் இல்லமும் பலத்த சேதமுற்றுள்ளது.

இவரின் அறைக்கு அருகில் உள்ள யாகப்பர் மண்டபமும் ஆட்லறி ஷெல் காரணமாக பாரிய சேதமுற்றுள்ளது.

(ப 17 கி)

## அலுவலகத்தில் திருட்டு

கிளிநொச்சி மாவட்டக் கல்வித் திணைக்கள அலுவலகம் அண்மைய இராணுவநடவடிக்கையின் போது உடைக்கப்பட்டு தட்டச்சு இயந்திங்கள், றோணியோ இயந்திரம், கல்குலேட்டர்கள், குளிர்சாதனப்பெட்டி உட்பட பல ஆவணங்கள் களவாடப்பட்டுள்ளதாகத்தெரியவருகிறது. (ப3 கி

11 லொறிகளில் கொள்ளைப் பொருட்கள் கொழும்புக்கு

# திருமலைநகர் தமிழர் வீடுகளில் பகலில் சீருடையினர் கைவரிசை

திருமலையில் தற்போதும் பட்டப்பகலில் தமிழர் வீடுகளில் கொள்ளைகள் நடைபெற்று வருகின்றன.

சென்ற வாரம் திருமலை நகர்ப்பகுதியில் உள்ள கந்த சுவாமிகோவில் பூசகரின் வீட்டில் புகுந்த 10 பேர் கொண்ட கோஷ்டியினர் வீட்டுக்காரர்கள் அனைவரையும் கதிரைகளில் அமர்த்திவிட்டு பல இலட்சம் ரூபா பெறுமதியுடைய நகைகள், மற்றும் உபகரணங்களை எடுத்துச் சென்றனராம்.

இரண்டு மூன்று தினங்களின் பின் நகர்ப் பகுதி பொலிஸ் (I P) இன்ஸ்பெக்டரினால் கொள்ளையர்கள் 10 பேரும் கண்டு பிடிக்கப்பட்டு பொருட்களும் மீட்கப்பட்டு பூசகரிடம் ஒப்படைக்கப்பட்டதாம்.

இந்தப் 10 பேரில் எட்டுப் பேர் பொலிசாரும் இராணுவத்தினருமாகும்.

பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஒரு தமிழ்ப்பெண்ணை திருமணம் செய்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.இவர்மீது இராணுவத்தாரும் ஏனைய பொலிஸ்காரரும் கோபம் கொண்டுள்ளதாகத் தெரிய வருகின்றது.

இதேவேளை திருகோணமலையில் இராணுவ நடவடிக்கையின்போதும் அதன் பின்னரும் கொள்ளையடித்த குற்றச்சாட்டுக்களின் பேரில் இதுவரை 39 பொலிஸ் உத்தியோகஸ்தர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

இப் பொலிஸ் உத்தியோகஸ்தர்களின் வீடுகளில் இருந்து கொள்ளையடிக்கப்பட்ட பெறுமதிமிக்க பொருட்கள் மீட்கப்பட்டதாகவும் அறிவிக்கப்படுகின்றது.

கைது செய்யப்பட்ட பொலிஸ் உத்தியோகஸ்தர்களில் பெரும்பாலானோர் முஸ்லிம்களும், சிங்களவர்களுமாவர்.

இது இவ்வாறிருக்க திருகோணமலையில் இராணுவ நடவடிக்கையின்போது தமிழர்களின் வீடுகளில் கொள்ளையடிக்கப்பட்ட பொருட்கள் 11 லொறிகள் மூலம் இராணுவப் பாதுகாப்புடன் கொழும்புக்கு கொண்டு செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் கூறுகின்றனர்.

இந்த பெறுமதி மிக்க பொருட்கள் அனைத்தும் இராணுவத்தினராலேயே கொள்ளையிடப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. (43 கி)

## உரவகை தருவிக்க ஏற்பாடு

யாழ். மாவட்ட விவசாயத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் 2000மெற்றிக் தொன் பி- 1 கலவை உரவகையை உடனடியாகத் தருவித்து யாழ். மாவட்ட விவசாயிகளுக்கு விநியோகிக்க நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் ஆகக் குறைந்தது 2000 மெற்றிக்தொன் யூரியா ஐப்பசி மாத முதல் வாரத்தில் நெற்செய்கையாளர்களுக்கு விநியோகிக்க ஒழுங்கு செய்யுமாறும் விவசாய அமைச்சின் வடமாகாண சந்தைப் படுத்தும் அதிகாரியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். 12 து

## தபாலகம் இடம் மாறும்

யாழ்ப்பாணம் இந்துமகளிர் கல்லூரியில் இயங்கிவரும் யாழ். பிரதம தபாலகம் விரைவில் யாழ். பல்கலைக் கழகத்தில் இயங்குவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப் பட்டு வருவதாகத் தெரிய வந்துள்ளது. (33 கி)

## நவராத்திரி விழா

மிருசுவில் துர்க்காபுரம் ஸ்ரீஞான துர்க்கா தேவஸ்தானத்தில் நவராத்திரிவிழா தற்பொழுது நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

இன்று சனிக்கிழமை மாலை 6 மணிக்கு மானம்பூ திருவிழா நடைபெறும். சிவஸ்ரீ கு. ஸ்ரீகாந்தாக்குருக்கள் தலைமையில் கௌரி விரதம் ஆரம்பமாகி தொடர்ந்து 21 நாளும் சகசரநாம அர்ச்சனை நடைபெறும். (கி)

## வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம் மனோகரா தியேட்டர் சந்திக்கு அண்மையில் உள்ள பல வீடுகள் திருடர்களின் கைவரிசைக்கு உள்ளாகியுள்ளன. இப் பகுதியைச் சேர்ந்தோர் இடம் பெயர்ந்து உள்ளதால், இதனைச் சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் வீட்டை உடைத்து பொருட்களைக் களவாடுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இப்பகுதியிலுள்ள அநேக வீடுகள் குண்டு வீச்சினால் சேதமடைந்துள்ளன.

சில தினங்களுக்கு முன்பு அவ்விடத்தில் வசிக்கும் விரிவுரையாளர் ஒருவரது வீடு உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளது. (கி)

## ஊரடங்கு வேளையிலும் மக்கள் சேவையில் இவர்கள்

யாழ். செயலக ஒய்வூதியப் பிரிவினரால் ஆகஸ்ட் மாத ஒய்வூதிய வவுச்சர்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

கிராமிய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோர் தமது ஒய்வூதிய வவுச்சர்களை தத்தமது கிராமிய வங்கிகளில் நேரடியாகப் பெற்றுக் கொள்ளலாம்.

ஏனைய வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோரின் வவுச்சர்கள் அவர்களது வீட்டு முகவரிக்கு தபாலில் அனுப்பப்பட்டுள்ளன.

யாழ். மாநகர எல்லைக்குள் உள்ள வங்கிகளில் ஒய்வூதியம் பெறுவோரின் வவுச்சர்கள் யாழ். செயலகத்தில் வைத்து நேரடியாக வழங்கப் பட்டு வந்தது. திங்கட்கிழமை வரை பெறாதோரின் வவுச்சர்கள் அவர்களின் வீட்டு முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்படும்.

செப்டம்பர் மாதத்துக்குரிய வவுச்சர்கள் இவ்வாரம் இங்கு வந்து சேருமென எதிர் பார்க்கப்படுகின்றது. வவுச்சர்கள் கிடைக்கப்பெற்று ஒரு வாரத்துக்குள் அவை ஒய்வூதியக்காரர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்.

ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ள போதிலும் ஒய்வூதிய கிளை கணககாளர் எம். சிவபாலனும், பிரதம லிகிதர் எஸ் கந்தசாமியும் விடுமுறை தினங்கள் உட்பட அனைத்து தினங்களிலும் யாழ். செயலகத்துக்கு சமுகமளித்து கடமை புரிநது வருவதினாலேயே ஒய்வூதியம்கொடுப்பனவுகளை வழங்கக் கூடிய நிலை ஏற்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கி)

## வேலைக்குத் திரும்ப கோரிக்கை

இது வரை வேலைக்கு சமுகம் தராத யாழ்ப்பாணம பிரதம தபாலகத்தைச்சேர்ந்த சகல தபால் உத்தியோகத்தர்களையும், தபால் சேவர்களையும், மற்றும் சிற்றூழியர்களையும் உடன்வேலைக்கு சமுகமளிககுமாறு யாழ். தபால் திணைக்கள உயர் அதிகாரி கேட்டுள்ளார். 33கி

## இக்கடிதங்கள் உங்களுடையதா?

உரும்பிராய்:-சண்முகம் சிவபாக்கியம் உரும்பிராய் கிழக்கு, பி. என். செல்வரட்ணம் உரும்பிராய் மேற்கு, திருமதி சக்தியோதி ஆறுமுகம் உரும்பிராய் கிழக்கு, எ. ஜெயதீசன் உரும்பிராய் வடக்கு, கனகசபை செங்கமலர் உரும்பிராய் தெற்கு, பத்மராணி ராஜதுரை உரும்பிராய் வடக்கு, ப. ராசையா உரும்பிராய் தெற்கு.

[redacted]வெட்டி:- கே. நவரட்ணம் அளவெட்டி வடக்கு, திருமதி பாலயோகினி நடராஜா அளவெட்டி வடக்கு, சுந்தரம் நாகராஜா அளவெட்டி வடக்கு, குகஞானஜோதி [redacted]த்தினம் அளவெட்டி தெற்கு, ஞானசோதி சின்னத்தம்பி அளவெட்டி தெற்கு, சிவகுமாரன் அகிலராணி அளவெட்டி வடக்கு.

நடராஜா தேவராசன் புத்தூர் மேற்கு, சதாசிவம் சொர்ணமலர் ஆவரங்கால் மேற்கு.

நீர்வேலி:- சின்னத்தம்பி செல்வரத்தினம் நீர்வேலி தெற்கு, அன்னலட்சுமி சிவானந்தன் நீர்வேலி வடக்கு, (ப: 11, 66கி)

சிறு விளம்பரம்

புத்தகம்

குடும்ப ஜோதிடம், நீங்கள் ஜோதிடம் கற்றுக் கொள்ளவும், ஜாதகம் கணிக்கவும் விவாகப் பொருத்தம் பார்க்கவும் சுபமுகூர்த்தங்களுக்கு நாட்கள் குறிப்பிடவும், பலன்கள் காணவும் உபயோகமான பல அரிய விஷயங்கள் அடங்கிய துணைவன் விலை 45/- விற்பனை பூபாலசிங்கம் புத்தகசாலை, நல்லூர், யாழ்ப்பாணம். 09042

யாழ். வண்ணை கன்னாதிட்டி காளியம்பாள் தேவஸ்தானம்

கேதாரகௌரி நோன்பு பூஜை 18/10/90 ஐப்பசி திங்கள் 1-ம் நாள் வியாழக்கிழமை காலை 7 மணி முதல் சிறப்பு பூஜை நடைபெறும். இன்று முதல் கௌரி நோன்பு நூல் காப்பு காலை 7 மணி தொடக்கம் காலை 10 மணிவரை பதிவு செய்து கொள்ளலாம்.

நோன்புநூல் மட்டும் 20 ரூபா

தேவஸ்தானம்

28-9-90 09099

அறிவித்தல்

பொதுமக்களின் நலன் கருதி இல. 6, பலாலி வீதி, திருநெல்வேலி சந்தியில் அமைந்துள்ள (DIA ELECT RONIC COMPLEX) ஸ்தாபனத்தில்

வெளிநாட்டு நாணயம்

மாற்றிக் கொடுக்க ஒழுங்குகள் செய்து கொடுக்கப் பட்டுள்ளதை மகிழ்வுடன் அறியத் தருகிறோம். 09096

முரசொலிக்கு வந்த கடிதம்

## கபடத்தனப் பிரசாரத்தை மக்கள் நம்பிவிடக் கூடாது

ஆசிரியர்,
முரசொலி.

கடந்த 24-ம் திகதி காலை தமிழ் மக்கள் ஒலிபரப்பு என்ற இலங்கை அரசின் ஒலிபரப்பில் ஒலிபரப்பப்பட்ட செய்தி எம்மை பெரும் அதிர்ச்சிக்குள்ளாக்கியது. அதனால் இதை எழுதுகின்றேன்.

தமிழீழ விடுதலைபுலிகளின் பிரதித் தலைவர் மாத்தையாவின் குடும்பத்தினர் எல்லோரும் வெளிநாட்டில் சுகபோகங்களை அனுபவித்துக்கொண்டிருக்கின்றனர். சாதாரண மக்கள் தான் இங்கு துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார்கள் என்பது செய்தி.

உண்மையில் திரு. மாத்தையாவிற்கு ஒரு சகோதரியும், ஒரு சகோதரனுமேயுண்டு. சகோதரியின் கணவர் ஓர் லொறிச் சாரதியாக இன்றும் வல்வெட்டித்துறையிலே வேலை பார்த்து வருகின்றார். மாத்தையாவின் தமையனார் ஊரில் ஓர் சிறிய பலசரக்குக் கடையினை வைத்து அதில் வரும் வருவாயில் தான் குடும்ப சீவியத்தினை நடாத்தி வருகின்றார். அவர்கள் பெரும் வசதிபடைத்த குடும்பத்தினர் அல்லர். மிகச் சாதாரண குடும்பத்தில் பிறந்த சாமானியர்களே.

''லிபரேசன் ஒப்பரேசன்'' என்ற வடமராட்சித் தாக்குதலின்போது கூட வடமராட்சியை விட்டே வெளியேறாமல் வல்வையிலேயே அவர்கள் வாழ்ந்து வந்தார்கள். பின் இந்திய இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட மாத்தையாவின் தமையனார் ஒரு மாதத்தின் பின்னரே விடுதலை செய்யப்பட்டார். இப்படியான துன்பங்களையும் சோதனைகளையும் தாங்கி இந்த மண்ணிலேயே வாழ்ந்து வரும் போராளிகளின் குடும்பங்களைப்பற்றி அவதூறான பொய்ப் பிரசாரத்தில் ஈடுபடும் இலங்கை அரசின் கபடத்தனமான பிரசாரத்தை சாதாரண மக்கள் நம்பிவிடக்கூடாது என்பதற்காக இதை எழுதுகின்றேன்.

வல்வை ச.காந்திதாசன்,
வல்வெட்டித்துறை

முரசொலி

## எமது சிந்தனை

1990 - 09 - 29 சனி

"கல்வி என்பது இந்தத் தலைமுறை இனிவருந் தலைமுறைகளுக்குச் செலுத்த வேண்டிய கடன்"

— ஜோர்ஜ் பீபொடி

# யாழ் இந்துக் கல்லூரி

நூற்றாண்டு கண்டு நிமிர்ந்து நிற்கும் யாழ் இந்துக் கல்லூரியை வாழ்த்துகிறோம்; வணங்குகிறோம்!

ஈழத்துத் தமிழர்களின் பண்பாட்டோடு, வாழ்வோடு, வளத்தோடு பிணைந்தது யாழ் இந்து என்னும் புனித ஊற்று. இங்கே சுரந்த அறிவும், ஆன்மீகமும், கலையும், ஒழுக்கமும் பொங்கிப் பெருகி இந்நாட்டையும் வேறு பல நாடுகளையும் வளம் செய்தன; வாழ்வித்தன.

யாழ் இந்துவின் மைந்தர்கள் சென்ற திசையெல்லாம் தம் முத்திரையைப் பொறித்து இந்து அன்னைக்குப் பேரும் புகழும் சேர்த்தனர்; சேர்க்கின்றனர்.

ஆசிரியர்களை, மருத்துவர்களை, பொறியியல் வல்லுநர்களை, தொழில் நுட்பவியலாளர்களை, வழக்கறிஞர்களை, அரசியல் தலைவர்களை, நிர்வாகிகளை, எழுத்தாளர்களை, கலைஞர்களை உருவாக்குவதில் இந்த அறிவாலயம் ஆற்றிய பணி அளப்பரியது.

காலத்துக்குக்காலம் பல்கலைக்கழக அனுமதி பெறும் மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்தவரை இந்துக் கல்லூரி பல சாதனைகளைச் செய்து வந்துள்ளது. விளையாட்டுத் துறையிலும் அப்படியே.

இவை மட்டுமல்ல, இன விடுதலைக்காக இங்கு நிகழும் வேள்வியில் தம்மை ஆகுதியாக்கிக் கொண்ட இந்துவின் மைந்தரின் பட்டியல் மிக நீளம். இனப்பற்று, மொழிப்பற்று, தியாக உணர்வு, வீரம் முதலிய அரும் பண்புகளை ஊட்டி இவ்விளைஞர்களை வளர்த்த இந்து அன்னை இன்று நியாயமான பெருமை அடைகிறாள்.

நூற்றாண்டு கண்டிருக்கும் இக்கல்லூரியை நிறுவ உழைத்தவர்களுடைய கனவுகளை ஒருமுறை நிதானமாக நம் மனத்திரையில் ஓடவிட்டுப் பார்க்க வேண்டும்.

ஆங்கிலக்கல்வி கிறிஸ்தவப் பாடசாலைகளின் ஏகபோக உரிமையாக இருந்த ஒரு நிலையில், ஒரு சைவ ஆங்கில பாடசாலையை நிறுவிய முன்னோடி ஆறுமுக நாவலர் அவர்கள். அக்கால அரசின் புறக்கணிப்பால் அவர் முயற்சி தோல்வியுற்றது.

ஆங்கிலக் கல்வியைக்கூட, எமது பண்பாட்டுச் சூழலிலேயே நமது பிள்ளைகளுக்கு அளிக்க வேண்டும் என்ற விழுமிய நோக்கத்துடன் எழுந்த இந்துக்கல்லூரி நாவலர் கனவை நனவாக்கியது.

அர்ப்பணிப்புணர்வோடு சேவையாற்றிய அதிபர்கள் பலரையும் ஆசிரியர்களையும் இந்துக் கல்லூரி பெற்றது. அவர்கள் கேவலம் ஊதியத்துக்காக உழைப்பவர்களாக இல்லாமல் வழிகாட்டிகளாக — வழிபடு தெய்வங்களாக — விளங்கினர். அவர்கள் அடிச்சுவடுகளைப் பின்பற்றி இளஞ்சந்ததி தன் வாழ்க்கையை அமைத்துக் கொண்டது.

மலை கலங்கினும் நிலை கலங்கா மனத்தினர் அப்பெருமக்கள். 1961 இல் சாத்வீக எதிர்ப்பை முறியடிக்க வந்த ராணுவத்தினர் இந்துக் கல்லூரியை முகாமாக்க விரும்பினர். "இது சைவ பாரம்பரியம் பேணும் ஒரு கல்வி நிலையம். மது, மாமிசம் புழங்கும் உங்களை இங்கே அனுமதிக்க முடியாது!" என்று மறுத்தவர் விஜயம் ஆசைப்பிள்ளை. பேச்சில், நடை, உடை, பாவனைகளில் ஆங்கிலேயராகவே காட்சி தந்த 'ஆசையர்' நம் பாரம்பரியத்துக்குத் தந்த மதிப்பு அது.

பழைய மாணவராக, ஆசிரியராக, விளங்கி அதிபராக உயர்ந்தவர் பி. எஸ். குமாரசாமி அவர்கள். அவசியம் தேவைப்பட்ட கட்டிட நிதியை வழங்கிய அரசு, அதற்கு விலையாக அப்போதைய ஜனாதிபதிக்கு இந்துவில் ஒரு வரவேற்புபசாரம் அளிக்கும்படி கேட்டபோது, தன்மானத்தோடு நிமிர்ந்து நின்று விளைவுகளைச் சந்தித்தவர் இந்தப் பெருமகன்.

கல்லூரியோடு 'கட்டுப்பட்டுக்' கிடந்த சி. சபாரத்தினம், பன்முகப்பார்வை படைத்த என். சபாரத்தினம், பொதுவுடைமைத் தத்துவத்தின்படி வாழ்ந்து காட்டிய எம். கார்த்திகேசன்—இப்படிப் பலர் நினைவில் வருவார்கள்.

இவர்களுக்கெல்லாம் இந்த ஆற்றல் — திண்மை — எங்கிருந்து வந்தது?

"கூற்றம் குதித்தலும் கைகூடும் நோற்றலின்
ஆற்றல் தலைப்பட்டவர்க்கு"

என்பார் திருவள்ளுவர். இந்துக்கல்லூரி ஒரு தபோவனம். மகாத்மா காந்தி, சுவாமி விவேகானந்தர் முதலிய பெரியார்களின் திருவடிகள் பட்ட புனித தலம். அங்கே 'தவம்' செய்தவர்கள் வேறெப்படி இருப்பர்?

இன்று தேசிய கல்லூரியாக விளங்கும் யாழ் இந்துவைக் கட்டியெழுப்ப அந்நாளில் பாடுபட்ட அனைவரும் நன்றியோடு நினைவு கூரத்தக்கவர்கள்.

தமிழினம் அடுக்கடுக்காக வரும் பல சோதனைகளைத் தாண்டி நிமிர வேண்டியுள்ளது. இந்துக்கல்லூரி என்ற கலங்கரை விளக்கம், தமிழர்களுக்கு, அவர்கள் போக வேண்டிய திசையை நிச்சயம் காட்டும்!

# இந்த யுத்தமும், அரசாங்கமும், சிங்களத் தொடர்புச் சாதனங்களும்

— பிரேமதாச ஆட்சி எதிர்நோக்கும் ஒரு முக்கிய அரசியல் நெருக்குவாரம் பற்றிய சில குறிப்புக்கள்

ஜூன் 11 -ல் தொடங்கிய இந்த யுத்தம் தாங்கள் நினைத்தது போன்று தமக்கு விரைவான முடிவைத் தரப்போவதில்லை என்பதையும், அந்த முடிவும்கூடத் தாங்கள் எதிர்பார்த்தது போன்ற வெற்றியாக அமைவதற்கான சாத்தியக் கூறுகள் இல்லை என்பதையும் படிப்படியாக உணரத்தொடங்கியுள்ளன. அரசாங்கத்தின் பிரதம போர்க்குரலாக விளங்கும் திரு. ரஞ்சன் விஜேரத்தினாவின் அண்மைக் காலக்கூற்றுக்கள் ('யுத்தம் நீண்ட நாட்கள் தொடரும்'; 'எதிர்க்கட்சிகள் இணங்காவிடின் அரசியல்தீர்வு கிடையாது; ராணுவத் தீர்வெனின் காலம் நீடிக்கும்' எனவருபவை) வெகு நிதானமாக அவதானித்துக் கொள்ளப் படவேண்டியவையாகும்.

யுத்தம் தொடங்கும்பொழுது கூறப்பட்டனவற்றுக்குச் சிங்களத் தொடர்புச் சாதனங்களில் கிடைத்த அளவு முக்கியத்துவம் மேலே குறிப்பிடப்பட்டுள்ள கூற்றுக்களுக்கிருக்கவில்லையென்பது வானொலி மூலம் தெரிய வருகின்றது.

## யுத்தமும் சிங்களத்தொடர்புச் சாதனங்களும்

யுத்த சன்னத நிலைப்பாட்டில் கீழ்ஸ்தாயிகள் தடவப்பெறும் இந்தவேளையில் இப்பொழுதுநடைபெற்றுக் கொண்டிருக்கும் இந்த யுத்தத்தைச் சிங்களத் தொடர்புச் சாதனங்கள் எவ்வாறு சித்தரித்து வந்துள்ளன என்பதையும் நியாயப்படுத்தி நின்றன. - நிற்கின்றன என்பதையும்; யுத்தவெறியை ஒரு குறிப்பிட்ட மட்டத்தில் வைத்து ஆடுவதற்குத் தொடர்புச்சாதனங்கள் எவ்வாறு தொழிற்பட்டன என்பதையும் ஒரு சிறிது அறிந்து கொள்வது அவசியமாகும். அவ்வாறு அறிந்து

எமது அரசியல் விமர்சகர்

**க. மா. இராசையா**

கொள்வதினால் சிங்களப் பேரினவாதப் பிரக்ஞை எவ்வாறு தூபமிடப் படுகின்றது என்பதும் இந்த யுத்த சன்னதம் எத்தகைய பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு ஏற்படுத்துகின்றது என்பதும் ஓரளவு புலனாகும்.

அத்துடன் இத்தகைய ஒரு நோக்கு ஜூன் 11 யுத்தத்துக்கும், 1984 - 1987 -ல் நடாத்தப்பெற்ற யுத்தத்திற்கும் ஆட்ட முறையை, தலைமைத்துவம் ஆகியவிடயங்களிற் காணப்படும் வேறுபாடுகளையும் அறிந்து கொள்ள உதவும்.

அவ்வாறு நோக்கத் தொடங்குபொழுதும் முதலில் இரண்டு விடயங்கள் பற்றிய பிராரம்பத் தெளிவினைப் பெற்றுக் கொள்ளுதல் அவசியம்.

(i) சிங்களத் தொடர்புச் சாதனங்களின் இயல்புத் தன்மைகள்

(ii) சிங்களப் பேரினவாதப் பிரக்ஞையைப் பேணுவதற்கும் வளர்ப்பதற்கும் சிங்களத் தொடர்பியலாளரும் முக்கியமாகச் சிங்கள உத்தியோகத்தர் குழாமும் (Beauracracy) தொழிற்படும் முறைமை.

இலங்கையின் வெகுசனத் தொடர்புச் சாதனங்கள் பெரும்பாலும் அரசாங்கக் கட்டுப்பாட்டிற்குள்ளேயேயுள்ளது என்பதுஎல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மையே. பத்திரிகைகள், வானொலி, தொலைக்காட்சி ஆகிய மூன்று துறைகளும் அரசாங்கக்கட்டுப்பாட்டுக்குள் வருபவையெனினும் வானொலியும் தொலைக்காட்சியுமே முற்று முழுதான அரசாங்கக் கட்டுப்பாட்டினுள் வருபவையாகும். புதினப்பத்திரிகைகளைப் பொறுத்தவரையில் சில சிங்களப் பத்திரிகைகள் அரசகட்டுப்பாட்டிற்குக்கீழ் வருபவையல்ல, 'தவச' 'திவியின' 'அத்த' போன்ற பத்திரிகைகள் ('அத்த' இப்பொழுது வார இதழே) அரசாங்கத்துக்கு எப்பொழும் ஆதரவானவையன்று.

## சிங்களநாடு' மனோபாவம்

அத்தகைய ஒரு நிலையிருப்பினும் சிங்கள இனவாத நிலைப்பாடுகளில் 'தவச'வும், 'திவியின'வும் மிக இறுக்கமான நோக்கினையே பேணுவதை எவரும் அவதானித்திருப்பர். இலங்கையின் சிங்களப் புதினப் பத்திரிகைகள் தமது பார்வை வட்டத்தில் இலங்கையின் தமிழ் மக்களை இலங்கையின் இணைபிரியா அமிசமாகக் கொள்வதில்லை என்பது எல்லோருக்கும் தெரிந்த உண்மையாகும். இலங்கை ஒரு பல இன நாடு என்னும் கருத்தை சிங்களத்தில் கருத்தொருமைப்பாட்டுடன் வெளியிடும்பத்திரிகைகள் நாளிதழ்கள் அன்று. இரண்டொருமாத இதழ்களே. பொதுசன சிங்கள வாசகர்களிடையே அவற்றுக்கு அதிக செல்வாக்கு உண்டு எனக் கூறவே முடியாது. திவியின முதல் தினமினவரை சிலுமின முதல் றிவறச வரை வெகுசனச் சிங்களப்பத்திரிகைகளில் ஸ்ரீலங்கா என்பது 'சிங்களவர் மாத்திரம் வாழும் ஒரு நாடு' ஆகும்.

## இன விரோதப்போக்கு

இப்பத்திரிகைகள் இன விரோதமான வகையில் எழுதுவதற்குச் சந்தர்ப்பம் கிடைக்கும் பொழுதெல்லாம் அவ்வாறு எழுதியே வந்துள்ளன. அரசாங்கங்கள் தமிழ், முஸ்லிம் மக்களோடு இயைபு நிலை வளர்க்கும் நிலைப்பாட்டினை எடுக்கும் நாட்களிலும், இந்தப் பத்திரிகைகள் இன ஒற்றுமையை வற்புறுத்துவதில்லை. விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்த நாட்களில் தவச, திவியினவில் அந்தப் பேச்சுவார்த்தைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் படவில்லையென்பது எமக்குத் தெரிந்ததே. ஒவ்வொரு பத்திரிகை நிறுவனமும் தங்கள் ஆங்கில இதழில் ஒரு நிலைப்பாட்டையும் சிங்களப் பத்திரிகையில் இனவாத நிலைப்பாட்டையும் கடைப்பிடித்து வந்துள்ளமை இலங்கையின் தொடர்பியல் ஆய்வாளர்களால் சுட்டிக் காட்டப்பட்டு வந்துள்ள ஒரு உண்மையாகும்.

சிங்கள மயப்பாட்டைப் பேணுவதைத் தமது உயிர்மூச்சாகக் கொண்டுள்ளன இப் பத்திரிகைகள்.

அரசசார்பான சிங்களப் பத்திரிகைகளிலும் இதே நிலைமைதான்.

## வானொலி- தொலைக்காட்சி

வானொலி, தொலைக்காட்சியைப் பொறுத்தவரையில் அவை செய்திகளை வழங்கும் முறை முழுக்க முழுக்க அரசசார்பான நிலைமையேயாகும். அதிலும் சிங்கள நிலைபாட்டை வற்புறுத்தும் பொழுது அவர்கள் மிகமிக உஷாராகவே இருப்பர்.

ஜனாதிபதி பிரேமதாஸ தமது கட்சித் தொடக்கத்தில் இலங்கை பல இன நாடு என்பதை வற்புறுத்திய பொழுதும், வானொலி, தொலைக்காட்சியில், அந்தப் பல இன ஒருங்கு வாழ்வுக்கான ஒரு சின்னம்தானும் பேசப்படவில்லை, காட்டப் பட[illegible] என்பதை ஆய்வாளர்கள் வற்புறுத்தி வந்துள்ளனர்.

## உத்தியோகத்தர் குழாம்

அரச நிறுவனங்களில் (அவை தொடர்புச் சாதனங்கள் பற்றியனவெனினும்சரி அல்லனவெனினும்சரி) இந்தச்சிங்கள முதன்மை வாதத்தையும் சிங்கள முதன்மைப் பேணுகையையும் செய்வது சிங்கள இன உணர்வுள்ள உத்தியோகத்தர் குழாமே. அரசியல் வாதிகள் சில வேளைகளில் இடம் கொடுத்தாலும் இந்த சிங்கள உத்தியோகத்தர் குழுவாதம் தமிழுக்கு இடம் கொடுப்பதில்லை.

தொடர்புச் சாதனங்களும் உத்தியோகத்தர் குழுவாதமும் இணைகின்ற நிலையில் சிங்களப்பேரினவாதப் பிரக்ஞை உச்சக்கட்டத்தை அடைகின்றது.

ஏற்கனவே தமிழ்க்கோரிக்கைகளை வெறுப்புடன் நோக்கும் இவர்களுக்கு யுத்தம் வந்ததும் கேட்கவா வேண்டும்!

## மூன்று சக்திகள்

இந்த யுத்தத்தைப் பொறுத்த வரையில் இது ஆடப்படுவதிலும், ஆடப்படும் முறையிலும் மூன்று சக்திகள் முக்கியமாகத் தொழிற்படுகின்றன. முதலாவது அரசாங்கம், இரண்டாவது பாதுகாப்புப்படையினர் மூன்றாவது சிங்கள உத்தியோகத்தர் குழாம்.

யூன் -11யுத்தம் தொடங்கிய பொழுது அரசாங்கம் எடுத்த நிலைப்பாடு பின்வரும் முறையில் அமைந்திருந்தது;

1. "இந்த யுத்தம் இலங்கையின் ஒருமைப்பாட்டையும் பிரிவுபடாத் தன்மையையும் பேணுவதற்கான யுத்தமாகும்."

   அந்தப் பாரிய, உன்னதப்பணியை "படைவீரப் பெருமக்கள்" ("வீர செபலயோ" க்கள்) செய்கின்றனர் என்பதுஅழுத்திக் கூறப்பட்டது.

2. "இந்தப் போரானது புலிகளுக்கெதிரானதேயல்லாது தமிழ் மக்களுக்கெதிரானது அல்ல."

சிங்களப் பத்திரிகைகள் யுத்தத்தைப் பற்றி எழுதியபொழுது இரண்டாவது அம்சம் முக்கியத்துவம் பெறாது முதலாவது அம்சமே முக்கிய இடம் பெற்றது. முற்றிலும் அரசகட்டுப்பாட்டிலுள்ள வானொலியும், தொலைக்காட்சியுமே இரண்டாவதையும் வாயுபசாரமாகவே சொல்லி வந்தன.

இந்த இரண்டு நிலைப்பாடுகளும் நிறைந்த உள்ளார்த்தங்களை உடையவை. அவற்றை விளக்கமாக அறிந்து கொள்வது அவசியம்.

(தொடரும்)

# சகல வங்கிகளும் அதே இடத்தில் செயற்படுத்த நடவடிக்கை

யாழ். நகரில் உள்ள சகல வங்கிகளையும் அதே இடங்களில் மீண்டும் இயங்கச்செய்வதென நேற்று நடைபெற்ற உயர்மட்டக் கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இதற்கு ஏதுவாக நகரில் உள்ள வீதிகளில் மக்கள் நடமாடக் கூடிய சூழ்நிலை உறுதிப்படுத்தப்பட வேண்டும் எனவும் இங்கு சுட்டிக் காட்டப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இந்த வங்கிகளுக்குத் தேவையான பணத்தை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் உதவியுடன கப்பல் மூலம் கொழும்பிலிருந்து தருவிப்பது தொடர்பாகவும் இங்கு ஆராயப்பட்டது.

மக்கள் நடமாடக் கூடிய சூழ்நிலை நகரில் ஏற்படுத்தப்பட்டு, பணமும் கொழும்பிலிருந்து வந்ததும் வங்கிகள் உடனடியாக செயற்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 66 ரு

## கோட்டையில் புலிக்கொடி அங்கப்பிரதிஷ்டை நேர்த்தி

கோட்டையை விடுதலைப் புலிகள் கைப்பற்றி புலிக்கொடி பறக்கவிட்டதற்கு நேர்த்திக்கடன்வைத்த இளைஞர் ஒருவர் அங்கப்பிரதிஷடை செய்தார்.

பெரியவிளானில் இருந்து பண்டத்தரிப்பு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி அலுவலகம் வரை சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரம் இவர் அங்கப்பிரதிஷ்டை செய்து தனது நேர்த்திக் கடனை நிறைவேற்றினார். 13ரு

## ஆசிரியர் சம்பள நிதி வந்தது; கஷ்ட நிவாரணமும் கிடைக்கும்

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் யாழ். கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கான செப்டம்பர் மாத சம்பளக் கட்டுநிதி யாழ். கல்வித் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக யாழ். கல்விப் பணிப்பாளர் திரு. ஆர். சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

யாழ். மாவட்டத்திலுள்ள சகல கோட்டங்களும் தமக்கு வேண்டிய தொகை பற்றிய பட்டியலுடன் அடுத்த மாதம் 2-ம் திகதிக்கு முன்னதாக கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொள்ளும்படியும், அவர் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்ட ஆசிரியர்கள் மற்றும் கல்வித் திணைக்கள ஊழியர்களுக்கு செப்டம்பர் மாத கஷ்ட நிவாரணமும், சம்பளத்துடன் சேர்த்து வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். 70-கி

## வந்தாறுமூலைப் பகுதியில் கைதான 148 தமிழர் நிலை காணாமல் போனதாகத் தகவல்

மட்டக்களப்பு வந்தாறுமூலையில் இராணுவத்தினால் கைது செய்யப்பட்ட 148 தமிழர்கள் 'காணாமல்' போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் கைது செய்யப்பட்டு பல தினங்களாகிவிட்ட போதிலும் இவர்களைப்பற்றிய விபரம் எதனையும் உறவினர்களால் அறிய முடியாதுள்ளது.

இந்த தமிழர்களை தாங்கள் கைது செய்யவில்லையெனவும், அவர்கள் பற்றிய தகவல் எதுவும் தங்களுக்குத் தெரியாதெனவும் தற்பொழுது இராணுவத்தினர் தெரிவித்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சனின்கவனத்துக்குகொண்டுவரப்பட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன. (கி)

### முதலுதவிச்சிகிச்சை இன்று ஆரம்பம்

கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் இன்று காலை 10 மணியளவில் சென்ஜோன்ஸ் அம்புலன்ஸ் முதலுதவிச்சிகிச்சை நிலையம் டாக்டர் சபாநாதன் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்படும். 71 ரு

### திருமலை...

திரும்புமாறு அரசாங்கம் அறிவித்திருந்தபோது, நாட்டு நிலைமை, போக்குவரத்து சீரின்மை காரணமாக தாம் திருகோணமலைக்கு வரமுடியாதிருப்பதாக இவ்வூழியர்கள் அனைவரும் கூட்டாக எழுதிய கடிதம் ஒன்றை வடகிழக்கு மாகாண ஆளுநருக்கு அனுப்பிவைத்திருந்தனர்.

அப்படியிருந்தும் வேலை நீக்கக் கடிதம் தமக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக இவர்கள் கவலை தெரிவித்தனர்.

பதவி நீக்கக்கடிதம்தொடர்பாக கூட்டுறவுத்திணைக்களத்தைச் சேர்ந்த ஊழியர்கள் கொக்குவில் பொது நூலகத்தில் உள்ள யாழ் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் அலுவலகத்தில்01-10-90 திங்கள் காலை 10 மணிக்கு சந்தித்து தமது அடுத்த நடவடிக்கை குறித்து ஆராயவுள்ளனர்.

'திருமலையில் தமிழ் அரச ஊழியர்கள் வேலையை இழக்கும் அபாயம்'' என்ற தலைப்பில் இம்மாதம் 25ஆம் திகதி முரசொலி செய்திவெளியிட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. 66-ரு

### இந்து...

ளது,

தற்போதைய சூழ்நிலையில் தபால் சேவகர்களால் வெளியில் சென்று தபால்களை விநியோகிக்க முடியாத நிலையேற்பட்டுள்ளது.

இதனாலேயே இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (33—து)

### ஒன்பது...

நேற்றுக் காலையிலிருந்து பெருந்திரளான மக்கள் அஞ்சலி செலுத்துமுகமாக கைலாசபதி அரங்கில் கூடியிருந்தனர்.

இந்த ஒன்பது வேங்கைகளின் உடல்களில் மூன்று பெண்புலிகளின் உடல்களும் அடங்கும்.

இவர்களின் விபரம்:- லெப். மோகன் (பருத்தித்துறை), 2-வது. லெப் எட்ரிக்ஸ் (பருத்தித்துறை), அனிபா (சாவகச்சேரி), சரத்பாபு (கொக்குவில்), கப்டன். கருணாநிதி (பருத்தித்துறை), ஜேம்ஸ் (வல்வெட்டித்துறை), பெண்புலி அனுரா(மட்டக்களப்பு), பெண்புலி மாதங்கி (பருத்தித்துறை), பெண்புலி சங்கீதா (திருநெல்வேலி). 70-கி

### கப்பலில் தபால்கள் செல்லும்

திங்கள் புறப்படவிருக்கும் லங்கா சிறி கபப்லில் தபாற் பொதிகள் அனுப்பப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. தபால்களை ஞாயிற்றுக்கிழமைக்கு முன்பாக தபால் அலுவலகங்களில் சேர்க்கும்படியும் பொதுமக்கள் வேண்டப்படுகின்றனர். 68 ரு

### தமிழ்ஊழியர்கள் கைதாகியுள்ளனர்

திருமலையில் இராணுவ நடவடிக்கையின் போது கைது செய்யப்பட்ட திருமலை போக்குவரத்துச் சபையைச் சேர்ந்த 12 தமிழ் ஊழியர்களினதும் நிலைபற்றி இதுவரை எதுவுமே தெரியவில்லையாம்.

இந்தப்பன்னிரண்டு பேரும் இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்டதாக நேரில் கண்டவர்கள் தெரிவிக்கின்றனர்.

### தபால் ஊழியருக்கு நேற்றுச் சம்பளம்

யாழ்ப்பாணம் பிரதம தபாலக ஊழியர்களது இம்மாதத்துக்குரிய சம்பளம் நேற்றுக் காசோலையாக வழங்கப்பட்டது. 33 ரு

### கண்டனம்

கிழக்கில் அமைக்கப்பட்ட முஸ்லிம்ஊர்காவற்படையைக் கலைக்குமாறு தமிழ் அரசியற் கட்சிகள் விடுத்த கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் கண்டித்துள்ளது.

### பீரங்கி...

வம் ஊர்காவற்றுறை நோக்கி நகர்வதை அடுத்தே கப்பல்களும் அகன்றதாகத் தெரிகிறது. 72 து

### சந்தை..

சரமாரியாக கலிபர் வேட்டுக்களைத் தீர்த்தன.

சற்றும் எதிர்பாராமல் இத்தாக்குதல் நடைபெற்றதால் சந்தைக்குள் நின்ற பொதுமக்களும் வியாபாரிகளும் பாதுகாப்புத் தேடி நாலாபக்கமும் சிதறி ஓடினர் (ப—10 து)

### திருமலை - கொழும்பு

லும் தீவிர சோதனை நடாத்தப்படுகின்றதாம்.

குடும்ப சகிதமாக வரும் ஆண்கள் மட்டுமே பெரும்பாலும் பிரச்சினையின்றி பயணம் செய்யக் கூடியதாக இருக்கிறதாம்.

ஏனைய ஆண்கள் 'பிரயாணத்தின் போது இராணுவத்தால் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்படுகின்றார்களாம்.

இதனால் திருமலையை விட்டுவெளியேறிய திருமணம் முடிக்காத இளைஞர்கள் மீண்டும் திருமலைக்குச்செல்ல முடியாத நிலையில் உள்ளனர். 43 கி

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ். கல்வியங்காடு டச்சுவீதி, 'லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 29-09-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

## கோட்டையிலே நாட்டிவிட்டோம் நமது கொடி!

நாட்டிவிட்டோம் நமதுகொடி கோட்டையில்......
ஓட்டிவிட்டோம் ஓநாய்களின் வேட்டையை .....
பூட்டிவிட்ட அடிமையெனும் புதுவிலங்கை உடைத்துக்
காட்டிவிட்டோம் புலிகளது கர்வத்தை!

வீரத்தமிழனது வெற்றித்தோள் புடைத்தெழும்பும்
நேரமிதைப் பார்த்தும் நீதூங்கும் மர்மமென்ன?
பாரத்தை இறக்கிப் பாதையிலே வைத்துவிட்டு
ஆரத்தழுவு ஆயுதத்தை... அப்போது விடியும்;

சுண்டைக்காய் நாமல்ல; சூரப் புலிகளென்று
அண்டைத் தேசமெலாம் ஆச்சரியப் படும்படி
பண்டைத் தமிழர் புலிக்கொடியைக் கோட்டையிலே
கொண்டுபோய் நாட்டிவிட்டோம்; குதித்தெழு தம்பி!

எலிகள் என்றெம்மை எண்ணி யிருந்தோரைக்
கிலிகொள்ளுவெண்ணம் கிளர்ந்தோட வைத்து
வலிமைத் தமிழின் விடிவுக்கு நின்றுழைத்து......
புலிகள் பலத்தைப் புரியவே வைத்துவிட்டோம்!

இன்னும் எம்மண்ணில் எத்தர் இருக்கின்றார்......
அன்னவரைத் தாக்கி அழிக்கும்நாள் வரையும்
கன்னல் தமிழர்! கண்ணுறங்க முடியுமோடா?
மின்னலெனக் கிளம்பு! மீளுமடா தமிழீழம்!

மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## யாழ். பிரதம தபாலகத்தில் எந்த முத்திரைகளும் இல்லை

யாழ். பிரதம தபாற்கந்தோரில் எதுவித தபால் முத்திரைகளும் இல்லாததால் பொதுமக்கள் முத்திரைகள் இன்றிப் பெரிதும் கஷ்டப்படுகின்றனர்,

இங்கு பதிவுத்தபால்கள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றபோதிலும் அதற்குரிய முத்திரைகளைப் பெறுவதற்கு மக்கள் தனியார் கடைகளில் இரு மடங்கு பணம் கொடுத்து பெறவேண்டியுள்ளது.

இதே வேளை சன்னாகம் தபாற்கந்தோரில் போதியளவு முத்திரை இருப்பது போல யாழ். பிரதம தபாலகத்திலும் பொதுமக்கள் முத்திரை பெற சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவேண்டும் என மக்கள் தெரிவிக்கின்றனர் 66.ரு

## கடமைக்குத் திரும்ப இறுதி அறிவிப்பு

கிளிநொச்சியில் கடமையாற்றும் ஆசிரியர்களை ஒக்ரோபர் முதலாம் திகதியில் இருந்து கடமைக்குத் திரும்புமாறு கிளிநொச்சிக் கல்வித் திணைக்களம் கோரியுள்ளது.

அத்துடன் கடமைக்கு வராத ஆசிரியர்கள், ஊழியர்களின் இம்மாதச் சம்பளம் வழங்கப்பட மாட்டாது எனவும், முடிவெடுக்கப்பட்டுள்ளதாகவும் இதன் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

மேலும் ஆவணிமாதச் சம்பளம்சகலருக்கும் வழங் ப்பட்டுள்ளதாகவும்,புரட்டாதிமாத சம்பளம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் இச்சம்பளத்துடன் புரட்டாதி 89 க்குரிய ஊக்குவிப்புப் பணமும் சேர்த்துவழங்கப்படும்(ப-17கி

## போக்குவரவு விதிகளை மீறியோர்

பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தின் அனுமதி பெறாது கொழும்பிற்குச் சென்ற பலர் விடுதலைப் புலிகளினால் அண்மையில் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் கொழும்பு போவதற்கு பயன்படுத்திய ஆட்டோக்கள் மற்றும் வாகனங்கள், படகுகள் அனைத்தும் விடுதலைப் புலிகளினால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக பயணிகள் போக்குவரத்து தொடர்பகத்தின் பொறுப்பாளர் சலீம் தெரிவித்தார்.

இவர்கள் தற்பொழுது கடுமையான விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும், அவர்களிற்குரிய தண்டம் விதிக்கப்பட்டதும் பெரும்பாலும் இன்று விடுதலை செய்யப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதே வேளை பயணிகள் போக்குவரத்துத் தொடர்பகத்தின் அனுமதியுடன் மூன்று பஸ்கள் நேற்று கொழும்பு சென்றன. 70-கி

### மண்கும்பானில்...

இவ்வாறு சென்ற ராணுவத்தினர் மண்கும்பான் பகுதியில் பாடசாலையில் தங்கியிருந்த பொதுமக்கள் சிலரை தாக்கியதுடன், அங்கிருந்த ஐந்து இளம் பெண்களை தமது வாகனங்களுக்குள் அழைத்துச் சென்று பாலியல் வன்முறைக்குள்ளாக்கினர்.

இச்சம்பவத்தை தொடர்ந்து ராணுவம் அங்கிருந்து விலகிச் செல்ல முற்படுகையில் அங்கு வந்த விடுதலைப்புலிகள் அவர்கள் மீது கடும் தாக்குதலைத்தொடுத்தனர். இத்திடீர் தாக்குதலினால் ராணுவம் பலத்த இழப்புகளை சந்தித்ததாக தெரியவருகிறது இத் தாக்குதலில் ராணுவத்தினரின் இரு கனரக வாகனங்களும் சேதமாகின இம்மோதலைத் தொடர்ந்து ஓர் அவ்ரோ விமானமும் இரு பொம்மர்களும் ஊர்காவற்றுறை மண்கும்பான் பகுதியில் குண்டு வீச்சு தாக்குதலை நடாத்தின.

இச்செய்திஅச்சுக்குப்போகும் வரை மேலதிக செய்திகள் ஏதும் கிடைக்கவில்லை. 72-73 து

### அத்தியாவசிய ..

தலைமையில் நேற்று இக்கூட்டம் நடைபெற்றது சர்வதேச செஞ்சிலுவைச்சங்க பிரதிநிதிகளும் இதில் கலந்து கொண்டனர். 68 ரு

### விலைப்பட்டியல்...

அத்துடன் ஒரு கிலோ புழுங்கள் தீட்டல் பச்சை அரிசி 25 ரூபா,ஒரு கொத்து புழுங்கல் தீட்டல் பச்சை அரிசி 28 ரூபா 50 சதம் மற்றைய ரக அரிசி ஒரு கிலோ 23 ரூபா கொத்து 26 ரூபா 25 சதம் என்ற விலையில் விற்கவேண்டும் எனவும் மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.